# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2026 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க,
## பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான
## சமவாய (திருத்தச்) சட்டம்

---

**[2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2026, ஓகத்து மாதம் 07 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க ெவளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 80.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## 2026 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டம்

[2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 42/2021

## 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்துக்கான பொதுவான திருத்தம்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம், இச்சட்டத்துக்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்படும் பிரிவுகளில், அவ் அட்டவணையின் நிரல் II இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் சொற்களுக்குப் பதிலாக, அவ்வட்டவணையின் நிரல் III இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது :-

"(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், -

(அ) இலங்கையில்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவருக்கெதிராக;

(இ) இலங்கையின் அரசாங்க வசதியொன்றுக்கெதிராக; அல்லது

(ஈ) ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது செய்வதனைத் தவிர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்தை வலுக் கட்டாயப்படுத்துவதற்கான எத்தனிப் பொன்றில்,

நிறைவேற்றப்படுகின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பயங்கரவாதச் செயல்களை நோக்கி இட்டுச்செல்லப்படுகின்ற அல்லது அவற்றை விளைவிக்கின்ற இலங்கைக்கு வெளியே முழுமையாகவோ அல்லது பகுதியளவில் இச்சட்டத்தின் கீழான தவறொன்றாக அமைந்துருவாகின்ற ஏதேனும் செயலைப் புரிகின்ற ஆளொருவருக்கு அல்லது அவர் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட் பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும்:-

"ஆயின், செயலொன்று மேலே தரப்பட்டுள்ள தவறாக அமைவதற்கு, வழங்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், பொருள் ஆதரவு அல்லது வளங்கள் தவறொன்றைப் புரிவதில் உண்மையாகவே பயன்படுத்தப்பட்டன அல்லது குறிப்பிட்டவொரு பயங்கரவாதச் செயலுடன் இணைந்திருந்தன என்பதைக் காட்டுவது அவசியமானதாதலாகாது.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்-

(அ) பந்தி (ஆ)வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ஆ) புரிவதில் உதவுகின்ற அல்லது உடந்தையாகவிருக்கின்ற;", அத்துடன்

(ஆ) பந்தி (ஆ)வை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகள் உட்புகுத்துவதன் மூலமும்;-

"(ஆஅ) புரிவதற்கு அல்லது புரிய எத்தனிப்பதற்கு ஏனையோரை ஒழுங்கு செய்கின்ற மற்றும் பணிக்கின்ற;

(ஆஆ) புரிவதில் உடந்தையாளரொருவராகப் பங்கு பற்றுகின்ற;

(ஆஇ) புரிவதற்கு அல்லது புரிய எத்தனிப்பதற்குப் பங்களிக்கின்ற; அல்லது";

(3) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2ஆ) சட்டமுறையற்ற விதத்திலும் வேண்டுமென்றும், நேரடியான அல்லது நேரடியற்ற வழிவகைகள் மூலம், -

(அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே ஒரு பயங்கரவாதச் செயலொன்றைப் புரிவதற்கு இலங்கையில் பயங்கரவாதப் பயிற்சியை தவறிழைத்துச் செயலாற்றும், திட்டமிடும் அல்லது அதற்குத் தயாராக்கும் அல்லது அதில் பங்குபற்றும், அல்லது அப்பயிற்சியை வழங்கும் அல்லது பெறும் நோக்கத்துக்காக;

(ஆ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே பயங்கரவாதச் செயலொன்றைப் புரிவதற்கு வேறோர் அரசுக்கு அல்லது ஆள்புலத்துக்குப் பயணிப் பதற்காக அல்லது பயணிக்க எத்தனிப்பதற்காக;

(இ) வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளியொருவராக வருவதற்கு வேறோர் அரசுக்கு அல்லது ஆள்புலத்துக்குப் பயணிப்பதற்காக அல்லது பயணிக்க எத்தனிப் பதற்காக;

(ஈ) பின்வரும் நோக்கத்து வேறோர் அரசுக்கு அல்லது ஆள்புலத்துக்குப் பயணிப்பதற்காக அல்லது பயணிக்க எத்தனிப் பதற்காக:-

(i) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே பயங் கரவாதச் செயலொன்றை இழைக்கச் செயலாற்றும், திட்டமிடும் அல்லது தயாராக்கும், அல்லது அதில் பங்குபற்றும் நோக்கத் துக்காக;

(ii) ஓர் அரசில் அல்லது ஆள்புலத்தில் பயங்கரவாதப் பயிற்சியை தவறிழைக்கச் செயலாற்றும், திட்டமிடும் அல்லது தயாராக்கும், அல்லது அதில் பங்குபற்றும், அல்லது அதனை வழங்கும் அல்லது

பெறும் நோக்கத்துக்காகவும் மற்றும் அவ்வரசில் அல்லது ஆள்புலத்தில் அல்லது வேறோர் அரசில் அல்லது ஆள்புலத்தில் ஏதேனும் பயங் கரவாத ஒழுங்கமைப்பில் சேவையாற்றுவதற்காக அல் லது போராடுவதற்காக;

(iii) ஆயுதந்தாங்கிய மோதல்கள் உட்படவும் அவை சம்பந்த மாகவும் அல்லது அத்தகைய ஆயுதந்தாங்கிய மோதலுடன் இணைந்த அச்சுறுத்தலை எடுத்துரைப்பதற்கான ஏதே னும் தீர்மானம் சம்பந்தமாகப் பயங்கரவாத பயிற்சியை வழங்கும் அல்லது பெறும் நோக்கத்துக்காக;

(iv) பயங்கரவாதச் செய லொன்றை இழைக்கச் செயலாற்றும், திட்டமிடும் அல்லது தயாராக்கும், அல்லது அதில் பங்குபற்றும் அல்லது பயங்கரவாதப் பயிற்சியை வழங்கும் அல்லது பெறும் நோக்கத்துக்காகத் தனது வதியரசு அல்லது தேசியத்துவம் அல்லாத அர சொன்றிற்குப் பயணிக்கும் அல்லது பயணிக்க எத்தனிக்கும் ஆட்கள் வேண்டுமென்று ஆட் சேர்க்கும், ஒழுங்கு செய்யும், இடம்பெயர்க்கும் அல்லது

அவர்களுக்குச் சாதனங்களை வழங்கும் நோக்கத்துக்காக; அல்லது

(v) பயங்கரவாதச் செய லொன்றை இழைக்கச் செயலாற்றும், திட்டமிடும் அல்லது தயாராக்கும், அல்லது அதில் பங்குபற்றும் அல்லது பயங்கரவாதப் பயிற்சியை வழங்கும் அல்லது பெறும் நோக்கத்துக்காகத் தனது வதியரசு அல்லது தேசியத்துவம் அல்லாத அரசொன்றிற்குப் பய ணிக்கும் அல்லது பயணிக்க எத்தனிக்கும் ஆட்களை ஆட்சேர்ப்பதற் கான செயல்களுட்பட வேண்டுமென்று ஒழுங்கு செய்யும் அல்லது அவர்களை வேறுவகையாக வசதிப் படுத்தும் நோக்கத்துக்காக; அல்லது

(உ) பயங்கரவாதப் பயிற்சிக்காக ஆட் களைக் கடத்தி வியாபாரம் செய்வதில் ஈடுபடும் நோக்கத் துக்காக,

ஆட்களுக்கு நிதியளிப்பதற்கு அத்தகைய நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், பொருள் ஆதரவு அல்லது வளங்கள் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படவுள்ளன என அறிந்து கொண்டு அல்லது அவ்வாறு நம்புவதற்கான காரணங்களைக் கொண்டிருந்து, அத்தகைய

நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், பொருள் ஆதரவை அல்லது வளங்களை வேறோர் ஆளிடமிருந்து சேகரிக்கும் அல்லது சேகரிப்பதற்குச் சதிசெய்யும், அல்லது வேறோர் ஆளுக்கு நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், பொருள் ஆதரவை அல்லது வளங்களை வழங்கும் அல்லது வழங்குவதற்குச் சதிசெய்யும் எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.".

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், (2) ஆம் உட்பிரிவில் அல்லது (2அ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், (2அ) என்னும் உட்பிரிவில் அல்லது (2ஆ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(5) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான, (2) ஆம் உட் பிரிவின்கீழான அல்லது (2அ) என்னும் உட்பிரிவின்கீழான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான, (2) ஆம் உட்பிரிவின்கீழான, (2அ) என்னும் உட்பிரிவின்கீழான அல்லது (2ஆ) என்னும் உட்பிரிவின்கீழான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும், "தண்டிக் கப்படுதல் வேண்டுமென்பதுடன் குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றினால், அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்." எனும் சொற்களை இடுவதன் மூலமும்.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, “3 ஆம் பிரிவின்கீழான செயலொன்றைப் புரிவதனால்” என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், “ஏழு நாட்களைக்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பதினான்கு வேலைநாட்களைக்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 4அ என்னும் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறாகத் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “ஏழு நாட்களுக்குள்” மற்றும் “ஏழு நாட்களைக்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பதினான்கு வேலைநாட்களுக்குள்” மற்றும் “பதினான்கு வேலைநாட்களைக்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தில் “மூன்று மாதங்களை” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஆறு மாதங்களை” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 4இ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4இ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“அவசியமான மற்றும் சட்ட முறையான கொடுக்கல் வாங்கல்களுக்கு மேல் நீதிமன்றம் வலுவளித்தல்

**4இ.** (1) முடக்கற் கட்டளையினால் பாதிக்கப்பட்ட எவரேனுமாளின் எவையேனும் சட்டமுறையான அலுவல்கள் அல்லது வேறு அக்கறைகள், அதனால் விதிக்கப்பட்ட தடையினால் சேதப் படுத்தப்படக்கூடியனவாக இருக்குமிடத்து, அத்தகைய ஆள் அதற்கு ஆதாரமாகவுள்ள அத்தகைய நிகழ்வுகளைக் குறிப்பிட்டு மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும் அத்தகைய மேல் நீதி மன்றத்துக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான மனுவின்மூலம் செய்யப் படுதல் வேண்டுமென்பதுடன் 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச் செயல் களின் வரும்படிகள் சட்டத்தின் 127 ஆம் பிரிவில் விதிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக் கிணங்கக் கேட்டுத் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(3) மேல் நீதிமன்றம், அத்தகைய விண்ணப்பத்தைக் கவனத்துட் கொண்டதன் மேல், அத்தகைய முடக்கற் கட்டளை அத்தகைய ஆளின் சட்டமுறையான அலுவல்களை அல்லது வேறு அக்கறை களைச் சேதப்படுத்தக்கூடுமென்றும் அத்தகைய முடக்கற் கட்டளையினால் தடைக்கு அமைந்தனவாகவுள்ள நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், வருமானம், இலாபங்கள் அல்லது இடைச்சாதனங்கள் என்பன தொடர்பான ஏதேனும் அத்தியாவசியமான கொடுக்கல் வாங்கல்கள் சட்டமுறையான வகையில் நிறைவேற்றப்படக்கூடுமென்றும் அது அபிப்பிராயப்படின், 4 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட முடக்கற் கட்டளையை உறுதிப்படுத்தலாமென்பதுடன் –

(அ) மேல் நீதிமன்றத்தின் மேற் பார்வைக்கமையவும்; அத்துடன்

(ஆ) பெறுநரொருவர் அல்லது விசேட முகாமையாளரொருவர் நியமிக்கப்பட்டுள்ள அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபை பணிக்கப்பட்டுள்ள விடயத்தில், 4ஈ என்னும் பிரிவின்கீழ் அத்தகைய நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, வருமானத்தை, இலாபங்களை அல்லது இடைச்சாதனங்களை உடைமை கொள்ளுவதற்கு விடயத்துக்கேற்ப, அத்தகைய பெறுநரின், விசேட முகாமை யாளரின் அல்லது குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையின் மேற் பார்வைக்கமையவும்,

அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை நிறை வேற்றுவதற்கு வலுவளித்து மேலும் கட்டளையாக்கலாம்.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 4ஈ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஈ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"முடக்கலின் மேல் பெறுந ரொருவரை நியமித்தல் முதலியன

**4ஈ.** மேல் நீதிமன்றம், உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளரொருவர் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவல ரொருவரினால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மேல், அல்லது அதன் சொந்தப் பிரேரணையின்மீது, 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச்

செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் பாகம் IV இன் நியதிகளின்படி, முடக்கற் கட்டளைக்கு அமைந்ததாக்கப்பட்டுள்ள நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், வருமானம், இலாபங்கள் அல்லது இடைச்சாதனங்களை உடைமை கொள்வதற்கும் மற்றும் வேறுவகையாகக் கையாள்வதற்கும்-

(அ) பெறுநரொருவரை அல்லது விசேட முகாமையாளரொருவரை நியமிக்கலாம்; அல்லது

(ஆ) குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையைப் பணிக்கலாம்.”.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 4உ என்னும் பிரிவைத் திருத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4உ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் பந்தி (அ) வின் (i) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலமும்:-

“(i) அத்தகைய நிதிகள், ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, வருமானத்தை, இலாபத்தை அல்லது இடைச்சாதனங்களைக் கண்டறிவதற்கும், தடயத்தைப் பின்பற்றுவதற்கும், இனங் காண்பதற்கும், அவை இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதற்கும், அல்லது அவற்றின் அளவினை அறுதி செய்வதற்கும்;”; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

“(ஆ) நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறாக, முடக்கற் கட்டளைத் தேதிக்குமுன்னரான அல்லது பின்னரான காலப்பகுதியின்போது அத்தகைய நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், வருமானம், இலாபங்கள் அல்லது இடைச்சாதனங்கள் என்பன தொடர்பாக அத்தகைய கட்டளையிற் பெயர்குறிப்பிடப்பட்ட ஏதேனும் நிறுவனத் தினால் அத்தகைய நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், வருமானம், இலாபங்கள் அல்லது இடைச்சாதனங்கள் என்பன சம்பந்தமாக அத்தகைய நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஏதேனும் தொழில் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக அத்தகைய நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா ஆவணங்களையும் தகவல்களையும் அத்தகைய பொலிசு அலுவலருக்குக் கொடுத்துதவவேண்டுமெனவும்,”.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 4ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஊ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “3 ஆம் பிரிவின்கீழ் செயலொன்றைப் புரிவதனால்” என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 4ஏ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஏ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“இழப்பித்தலின் மேல் பெறுநரொருவரின் நியமனம் முதலியன

**4ஏ.** எவையேனும் நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், வருமானம், இலாபங்கள் அல்லது இடைச்சாதனங்கள் என்பன இச்சட்டத்தின் 4ஊ என்னும் பிரிவின்கீழ் அரசுக்கு

இழப்பிக்கப்பட்டுள்ளவிடத்து, இழப்பித்தற் கட்டளையை ஆக்குகின்ற நீதிமன்றம் அவ்வாறு இழப்பிக்கப்பட்ட அத்தகைய நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, வருமானத்தை, இலாபங் களை அல்லது இடைச்சாதனங்களைக் கையுதிர்ப்பதற்காக 4ஈ என்னும் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக, விடயத்துக்கேற்ப, ஒரு பெறுநரை அல்லது விசேட முகாமையாளரை நியமிக்கலாம் அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையைப் பணிக்கலாம்.".

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஐ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அவை அச்சட்ட வாக்கத்தின் 4ஒ மற்றும் 4ஓ என்னும் பிரிவுகளாக பயனுறுதலும் வேண்டும்:-

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 4ஒ மற்றும் 4ஓ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்

"புலனாய் வொன்றை நடாத்தும் போது பயன்படுத்த வேண்டிய விசேட புலனாய்வு நுட்பங்கள்

**4ஒ.** (1) இச்சட்டத்தின் கீழ் புலனாய் வொன்றை நடாத்துகின்ற எவரேனும் பொலிசு அலுவலரானவர், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அத்தகைய பொலிசு அலுவலருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களுக்கு மேலதிகமாக, புலனாய்வை நடாத்துகின்றபோது பின்வருவனவுட்பட ஏதேனும் புலனாய்வு நுட்பத்தைப் பயன்படுத்தலாம்:-

(அ) கண்காணிப்பு மற்றும் அவதானிப்பு;

(ஆ) மறைவான தொழிற்பாடுகள்;

(இ) காணொளிப் பதிவு;

(இ) கேட்டல் கருவிகளைப் பயன் படுத்தல்;

(உ) கட்டுப்படுத்தப்பட்ட ஒப்படைப்புகள்; அல்லது

(ஊ) கணினித் தரவு மற்றும் கணினி முறைமையை கண்டறிதல்.

(2) உதவி பொலிசு அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்கு குறையாத பொலிசு அலுவலரொருவர், (1) ஆம் உட்பிரிவின் (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளின் நோக்கங்களுக்கான கட்டளையொன்றுக்கென நீதிவான் நீதிமன்றத்துக்கு போதிய விடயங்களுடன் இரகசியமான மறுதிறத்தவரில்லா விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(3) இச்சட்டத்தின் கீழ் புலனாய்வுகளை நடாத்துகின்ற அலுவலரொருவரானவர், ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றை புரிந்துள்ளார் அல்லது புரிகின்றார் அல்லது புரியவுள்ளார் என்று சந்தேகிப்பதற்கு அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை கொண்டிருப்பின், உதவி பொலிசு அத்தியட்சகர் என்ற பதவி வரிசைக்கு குறையாத பொலிசு அலுவலரொருவர், ஏதேனும் நடத்தையை மறைமுகமாக கண்காணிப்பதற்கும் ஏதேனும் தொடர்பாடலைப் பதிவு செய்வதற்கும் அதிகாரமளிக்கும் ஆணையொன்றுக்காக நீதிவானுக்கு எழுத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(4) புலனாய்வை நடாத்துகின்ற அலுவலரினால் பெறப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட தகவலை பாதுகாத்தலையும் பேணிக்காத்தலையும் உறுதிப்படுத்துவது (2) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பத்தை செய்கின்ற அலுவலரின் பொறுப்பாதல் வேண்டும்.

கூட்டு புலனாய்வு குழு வொன்றை தாபித்தல்

**4ஓ.** (1) விடயத்தின் சூழ்நிலைகள் அவ்வாறு நியாயப்படுத்தினால், இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நியாயாதிக்கத்திற்குள் பின்வருவன பற்றிய புலனாய்வொன்றை நடாத்தும் நோக்கத்துக்காக, இலங்கை பொலிசினால் தீர்மானிக்கக்கூடியவாறாக, இலங்கை பொலிசுக்கும் புலனாய்வுகளை நடாத்து வதற்கு தத்துவமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபைக்கும் இடையே யான உடன்படிக்கையொன்றின் மூலம் குறிப்பான காலப்பகுதியொன்றுக்காக கூட்டு புலனாய்வுக் குழுவொன்று தாபிக்கப் படலாம்:-

(அ) மூன்றாம் பிரிவின் கீழான தவறொன்று; அல்லது

(ஆ) ஒன்றில் இலங்கைக்கு வெளியே ஏதேனும் நியாயாதிக்கத்தில் 3 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் தவறொன்றுக்கு நேரொத்த தவறொன்றைஅமைத்துருவாக்கும் அல்லது இலங்கையில் புரியப் பட்டிருப்பின் 3 ஆம் பிரிவில் குறிப் பீடுசெய்யப்பட்ட தவறொன்றாக அமையும் அந்நியாயாதிக்கத்தில் புரியப்பட்டதாக சார்த்தப்பட்ட செயலொன்று.

(2) கூட்டு புலனாய்வின்போது பெறப்பட்ட ஏதேனும் சான்று அல்லது விடயம், புலனாய்வு செய்யப்பட்ட ஆட்கள் நீதிமன்றத்தின் முன்னால் விளங்கப்படும் போது, அத்தகைய நீதிமன்றத்தினால் பயன்படுத்தப்படலாம்.”.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 5 ஆம் பிரிவை திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "3 ஆம் பிரிவின்கீழ் செயலொன்றைப் புரிவதனால்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 8 ஆம் பிரிவை திருத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, "அமைச்சர்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"நாடுகளுக்கான அல்லது அரசாங் கங்களுக் கிடையேயான ஒழுங்கமைப்பு களுக்கான உதவி

**9.** இரண்டாயிரத்து இரண்டாமாண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழான தவறுகள் தொடர்பாக புலனாய்வு, குற்றவழக்குத்தொடுப்பு, இழப்பிப்பு அல்லது கட்டளைகளின் வலுவுறுத்துகையில் அல்லது வேறெவையேனும் சட்ட வழக்கு நடவடிக்கை முறைகளில் இலங்கை அரசாங்கத்துக்கும் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்புக்கும் இடையேயுள்ளவாறு உதவி வழங்குதல் தொடர்பில் ஏற்புடையற் பாலனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 16அ என்னும் பிரிவைத் திருத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) “நிதித்தொழில்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணங்களை நீக்கிவிடுவதன்மூலமும்;

(2) “நிதிகள் அல்லது ஆதனம்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்: -

““ஆயுதந்தாங்கிய மோதல்” என்பது, சுடு படைக்கலன்களின் அல்லது வேறு கொலை ஆயுதங்களின் பாவனையை உட்படுத்துகின்றதாக அரசுகள் அல்லது அரசல்லாத திறத்தவர்கள் போன்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட குழுக் களிடையேயான ஒரு நீண்டகால வன்முறை நிலைமை என்று பொருளாகும்;

“கணினித்தரவு” என்பது, கணினி முறைமை யொன்றில் பணியொன்றை புரியவைப் பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டம் உட்பட கணினி முறைமையொன்றில் செயன்முறைக்கு பொருத்தமான அமைப்பொன்றில் நிகழ்வுகள், தகவல் அல்லது கருத்தேற்புகளின் ஏதேனும் பிரதிநிதித்துவம் எனப் பொருள்படும்;

“கணினி முறை” என்பது, 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டத்தில் அப்பதத்திற்கு குறித் தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளி” என்பது, ஒரு பயங்கரவாதச் செயலை

இழைக்கும், திட்டமிடும் அல்லது அதற்குத் தயாராக்கும், அல்லது அதில் பங்குபற்றும் அல்லது பயங்கரவாதப் பயிற்சியை வழங்கும் அல்லது பெறும் நோக்கத்துக்காக-

(அ) அத்தகைய தனியாளின் வதிவிட அல்லது தேசியத்துவ அரசிலிருந்து அல்லது ஆள்புலத்திலிருந்து வேறோர் அரசுக்கு அல்லது ஆள்புலத்துக்குப் பயணிக்கும் அல்லது பயணிக்க எத்தனிக்கும்; அல்லது

(ஆ) அத்தகைய தனியாளின் வதிவிட அல்லது தேசியத்துவ அரசு அல்லது ஆள்புலம் தவிர, ஓர் அரசிலிருந்து அல்லது ஆள்புலத்திலிருந்து வேறோர் அரசுக்கு அல்லது ஆள்புலத்துக்குப் பயணிக்கும் அல்லது பயணிக்க எத்தனிக்கும்,

தனியாளொருவர் என்று பொருளாகும்;";

(3) "நிதிகள் அல்லது ஆதனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்: -

""நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள்" என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) வங்கி வரவுகள், பயணிகளின் காசோலைகள், வங்கிக் காசோலைகள், பணக் கட்டளைகள், பங்குகள், பிணைப் பொறுப்புக்கள், முறிகள், வரைவுகள், கடன்பத்திரங்கள் மற்றும் மெய்நிகர் சொத்துக்கள் என் பனவுட்பட அவற்றுக்கு வரை யறுக்கப்படாமல், சட்ட முறையாக அல்லது சட்ட முறையற்ற விதத்தில் கொள் ளப்பட்ட ஏதேனும் நாணயம்;

(ஆ) (i) பருப்பொருளானதாக அல்லது பருப்பொருளற்ற தாக, அசைவுள்ளதாக அல்லது அசைவற்றதாக, உருவமானதாக அல்லது அருவமானதாக;

(ii) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்டதாக அல்லது அமைந் துள்ளதாக

இருப்பினுஞ்சரி, கொள்ளப் பட்ட சட்டமுறையாக அல்லது சட்ட முறையற்ற விதத்திலான ஏதேனும் ஆதனம்; அல்லது

(இ) நிதிகளை, பண்டங்களை அல்லது சேவைகளைச் சேகரிப்பதற்குப் பயன் படுத்தப்படக்கூடிய ஏதேனும்

பொருளாதார வளம் அல்லது வேறு சொத்து உட்பட, சட்டமுறையாக அல்லது சட்டமுறையற்ற விதத்தில் கொள்ளப்பட்ட வேறெவை யேனும் சொத்துக்கள்,

அத்துடன் அத்தகைய நிதிகளுக்கான, ஆதனத்துக்கான அல்லது வேறு சொத்துகளுக்கான உரித்தை அல்லது அவற்றிலான அக்கறையை மற்றும் அத்தகைய நிதிகளின்மீதான, ஆதனத்தின்மீதான அல்லது வேறு சொத்துகளின்மீதான ஏதேனும் வட்டி, வங்கிலாபம் அல்லது வேறு வருமானம், அல்லது அவற்றிலிருந்து திரளுகின்ற அல்லது அவற்றினால் தோற்றுவிக்கப்பட்ட பெறுமதி அல்லது அத்தகைய நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட முதலீடுகள் என்பன வற்றைச் சான்றுப்படுத்துகின்ற, இலத்திரனியல் அல்லது எண்ணிமம் உட்பட்ட ஏதேனும் வடிவத்திலான ஏதேனும் சட்ட ஆவணத்தை அல்லது சாதனத்தை உள்ளடக்குகின்றது;";

(4) "நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக் கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்: -

""இலங்கையின் அரசாங்க வசதி" என்பது, அரசாங்கத்தின், அரசாங்கத்தின் அல்லது மாகாணசபையின் ஏதேனும் அமைச்சின் அல்லது திணைக்களத்தின், உள்ளூரதிகாரசபையின், நியதிச் சட்டக் குழுவின், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், வங்கியின், தூதராலயத்தின்,

இராஜதந்திர அல்லது காவற்றூது வளவுகளின் ஆதனம், அல்லது இலங்கை அரசாங்கத்தின் வேறேதேனும் நாட்டிலுள்ள வேறு ஆதனம் என்று பொருளாகும்;";

(5) "நிறுவனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்: -

""நிறுவனம்" என்பது 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தில் அச்சொற்பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;";

(6) "ஆள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

""ஆள்" என்பது, எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள் என்று பொருளாகும் என்பதுடன் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி, ஆட்கள் குழுவொன்றையும், ஒரு சட்ட ஒழுங்கேற்பாட்டையும், அதற்குச் சட்ட ஆளுமை இருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, மற்றும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட

அல்லது தாபிக்கப்பட்ட அத்தகைய ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் கிளையொன்றையும் உள்ளடக்கும்;";

(7) "ஆள்" என்னும் சொல்லமைப்பின் வரை விலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

""குற்றச்செயலின் வரும்படிகள் முகாமை அதிகாரசபை" என்பது, 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின் படி தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபை என்று பொருளாகும்;

"விசேட முகாமையாளர்" என்பது, 2025ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி மேல் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு விசேட முகாமையாளரொருவர் என்று பொருளாகும்;";

(8) "பயங்கரவாதி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில்-

(அ) அவ்வரைவிலக்கணத்தின் (இ) என்னும் பந்தியில் "உதவிச்செய்கின்ற; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உதவிசெய்கின்ற;" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வரைவிலக்கணத்தின் (ஈ) என்னும் பந்தியில் "பங்களிக்கின்ற" என்னும் சொல்லுக்குப் பதிலாக "பங்களிக்கின்ற;

அல்லது” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வரைவிலக்கணத்தின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(உ) ஒரு வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளியொருவராகவிருக்கின்ற;”; அத்துடன்

(9) “பயங்கரவாதச் செயல்” என்னும் சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின் வரும் புதிய வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன் மூலமும்: -

“”மெய்நிகர் சொத்து” என்பது, எண்ணிம முறையில் வியாபாரஞ்செய்யமுடியுமான அல்லது கைமாற்றமுடியுமான, மற்றும் கொடுப்பனவு அல்லது முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியுமான பெறுமதியின் எண்ணிமப் பிரதிநிதித்துவம் என்று பொருளாகும், ஆனால் கட்டளை நாணயங்கள், பிணைப்பொறுப்புக்கள் மற்றும் வேறு நிதிசார் சொத்துக்களின் ஏதேனும் எண்ணிமப் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்காது.”.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**17.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

[பிரிவு 2]

## அட்டவணை

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| *திருத்தப்படும் முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு* | *ஏலவேயுள்ள சொற்கள்* | *மாற்றீடு செய்யப்படும் சொற்கள்* |
| 3(1) | நிதிகள் அல்லது ஆதனம் | நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், பொருளுதவி அல்லது வளங்கள் |
| | அத்தகைய நிதிகளை அல்லது ஆதனத்தை | அத்தகைய நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, பொருளுதவியை அல்லது வளங்களை |
| 3(2அ) | பொருள் ஆதரவை அல்லது வளங்களை | நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, பொருள் ஆதரவை அல்லது வளங்களை |
| 4(1) | எல்லா நிதிகளையும் அல்லது ஆதனத்தையும் | எல்லா நிதிகளையும், ஆதனத்தையும் அல்லது வேறு சொத்துக்களையும் |
| | அத்தகைய நிதிகளின் அல்லது ஆதனத்தின்மீது | அத்தகைய நிதிகளின், ஆதனத்தின் அல்லது வேறு சொத்துக்களின்மீது |
| 4(4) | நிதியை, ஆதனத்தை, | நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, |
| | நிதிகளின், ஆதனத்தின், | நிதிகளின், ஆதனத்தின் அல்லது வேறு சொத்துக்களின் |
| 4அ(2) இற்கான 2 ஆம் காப்புவாசகம் | நிதி, ஆதனம், | நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள் |
| 4அ(3) | நிதிக்கு, ஆதனத்துக்கு, | நிதிகளுக்கு, ஆதனத்துக்கு அல்லது வேறு சொத்துக்களுக்கு |

| | | |
|---|---|---|
| 4ஆ | அத்தகைய நிதிகள், ஆதனம், வருமானம், இலாபம் | அத்கைய நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், வருமானம், இலாபம் |
| 4உ(1) | ஏதேனும் நிதியை, ஆதனத்தை, | ஏதேனும் நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, |
| | நிதியை, ஆதனத்தை, | அத்தகைய நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, |
| 4உ(1)(அ)(ii) | நிதிகளின், ஆதனத்தின், | நிதிகளின், ஆதனத்தின் அல்லது வேறு சொத்துக்களின், |
| 4உ(1)(அ)(iii) | நிதிகள், ஆதனம், | நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், |
| 4உ(3) | நிதிகளை, ஆதனத்தை, வருமானத்தை, இலாபத்தை அல்லது இடை சாதனங்களை | நிதிகளை, ஆதனத்தை, அல்லது வேறு சொத்துக்களை, வருமானத்தை, இலாபத்தை அல்லது இடை சாதனங்களை |
| 4ஊ(1) | எவையேனும் நிதிகள் அல்லது | எவையேனும் நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள் |
| | அத்தகைய நிதிகளின் அல்லது ஆதனத்தின்மீது | அத்தகைய நிதிகளின், ஆதனத்தின் அல்லது வேறு சொத்துக்களின்மீது |
| 4ஊ(2) | அத்தகைய நிதிகளை, ஆதனத்தை | அத்தகைய நிதிகளுக்கு, ஆதனத்திற்கு அல்லது வேறு சொத்துக்களுக்கு |
| | அத்தகைய நிதிகளை, ஆதனத்தை | அத்தகைய நிதிகளுக்கு, ஆதனத்திற்கு அல்லது வேறு சொத்துக்களை |
| 4ஊ (4) | அத்தகைய நிதிகளை, ஆதனத்தை, வருமானத்தை, அத்தகைய நிதிகளின், அல்லது ஆதனத்தின் அல்லது அத்தகைய இடைச்சாதனங்கள்மீது அல்லது இலாபத்தை | அத்தகைய நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, வருமானத்தை அத்தகைய நிதி களின், அல்லது ஆதனத்தின் அல்லது சொத்துக்களின், அல்லது அத்தகைய இடைச் சாதனங்கள் மீது அல்லது இலாபத்தை |

| | | |
|---|---|---|
| 4ஊ(6) | எவையேனும் நிதிகள் அல்லது ஆதனம் | எவையேனும் நிதிகள் அல்லது ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள் |
| | அத்தகைய நிதிகளின் அல்லது ஆதனத்தின் | அத்தகைய நிதிகளின், ஆதனத்தின் அல்லது வேறு சொத்துக்களின் |
| 4எ(1) | எவையேனும் நிதிகளை அல்லது ஆதனத்தை | எவையேனும் நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை |
| | அத்தகைய நிதிகளின்மீது அல்லது ஆதனத்தின்மீது | அத்தகைய நிதிகளின்மீது, ஆதனத்தின்மீது அல்லது வேறு சொத்துக்களின்மீது |
| | ஏதேனும் நிதியை, ஆதனத்தை, வருமானத்தை | எவையேனும் நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, வருமானத்தை, |
| 4எ(2) | நிதியை, ஆதனத்தை, வருமானத்தை | அத்தகைய நிதிகளை, ஆதனத்தை அல்லது வேறு சொத்துக்களை, வருமானத்தை, |
| 4எ(2)(அ) | அத்தகைய நிதிகள் அல்லது ஆதனம் அத்தகைய தவறு புரியப்படுவதிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாக அல்லாமல் பெறப்படவில்லை | அத்தகைய நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள் அத்தகைய தவறு புரியப்படுவதிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாக அல்லாமல் பெறப்படவில்லை |
| | அத்தகைய நிதிகள் அல்லது ஆதனம் அத்தகைய | அத்தகைய நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள் |
| | தவறைப் புரிகையில் பயன்படுத்தப்பட்ட இடைச் சாதன மொன்றல்ல | அத்தகைய தவறைப் புரிகையில் பயன்படுத்தப்பட்ட இடைச் சாதன மொன்றல்ல |
| 4எ(2)(இ) | அத்தகைய நிதிகளில் அல்லது ஆதனத்தில் | அத்தகைய நிதிகளில், ஆதனத்தில் அல்லது வேறு சொத்துக்களில் |
| | அத்தகைய நிதிகளில் அல்லது ஆதனத்தில் பயன்படுத்தியிருந்தார் | அத்தகைய நிதிகளில், ஆதனத்தில் அல்லது வேறு சொத்துக்களில் பயன்படுத்தியிருந்தார் |

| | | |
|---|---|---|
| 4எ(2)(ஈ) | அத்தகைய நிதிகளில் அல்லது ஆதனத்தில் | அத்தகைய நிதிகளில், ஆதனத்தில் அல்லது வேறு சொத்துக்களில் |
| | அத்தகைய நிதி அல்லது ஆதனம் | அத்தகைய நிதி, ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள் |
| 5(1) | எவையேனும் நிதிகள், ஆதனம் | எவையேனும் நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள் |
| | அத்தகைய நிதிகளின், ஆதனத்தின்மீது | அத்தகைய நிதிகளின், ஆதனத்தின் அல்லது வேறு சொத்துக்களின்மீது |
| 5(2) | எவையேனும் நிதிகள், ஆதனம், | எவையேனும் நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், |
| 5(3) | எவையேனும் நிதிகள், ஆதனம், | எவையேனும் நிதிகள், ஆதனம் அல்லது வேறு சொத்துக்கள், |

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை ''பிரகாசன பியச'', அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.